# தமன பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2010 ஆம் ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுன் 24 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடு, செயற்திறன் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 வங்கிக் கணக்கிணக்கம்

சபையின் இரு வங்கிக் கணக்குகளது 2010 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையிலான கணக்கிணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

**பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2009, 2010 ஆம் ஆண்டுகளுக்கான 06 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.2.3 இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | | **இணங்காமை** |
|---|---|---|
| **(அ) 1988 பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிகள்** | | |
| (i) | விதி 13 | சான்றுறுதிப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டப் பிரதி ஒன்று நிதியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னரே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. |
| (ii) | விதி 19 | அடியிதழ் சேர் புத்தகங்கள் பாதுகாக்கப்படாமையால் 2 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போயின. |
| **(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள்** | | |
| (i) | 103,104 | சபைக்குச் சொந்தமான வாகனத்திற்கு 2009 நவம்பர் 17 ஆந் திகதியன்று ஏற்பட்ட விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) | 751 | கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் கையிருப்புப் பதிவேட்டில் பதியப்பட வேண்டுமாயினும் சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு பதியப்படுவது புறக்கணிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | 139 (10) (i) | சகல கொடுப்பனவுகளையும் தீர்த்து வைப்பதற்குப் போதிய மீதி உள்ளதா என்பதை ஆராயாது கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் தகுதி வாய்ந்த உத்தியோகத்தரால் வழங்கப்பட்டமையால் வங்கி நடைமுறைக் கணக்கின் காசேட்டு மீதி |

| | | |
|---|---|---|
| | | மேலதிகப்பற்றுக்குள்ளாகியது. |
| (iv) | 396 | வழங்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த போதும் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகள் சம்பந்தமாக பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை |
| (iv) | 756 | பட்டோலைப் பொருட்கள் தொடர்பான 2010 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்பு நடைபெறவில்லை |

**2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 வருவாய் நிர்வாகம்**

**2.1.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளபடியான வருவாய் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட மீதி | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட மீதி |
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | தீர்வையும் வரியும் | 489.8 | 40 | 389.8 | 459.9 | 367 | 92.9 |
| (ii) | குத்தகை வாடகை | 982.0 | 896 | 86.0 | 921.0 | 888 | 33.0 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 672.0 | 672 | - | 626.0 | 626 | - |
| (iv) | பிற வருவாய் | 394 | 396 | - | 249.0 | - | 249.0 |

**2.1.2 முத்திரைக் கட்டணம்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணப் பெறுமதி சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.2 செலவின அமைப்பு

சபையின் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம், வேறுபாடுகளுடன் கீழே காணப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது. | உள்ளபடியானது | வேறுபாடு | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது. | உள்ளபடியானது | வேறுபாடு |
| **மீண்டுவருஞ் செலவினம்** | **ரூபா ''000** | **ரூபா ''000** | **ரூபா ''000** | **ரூபா ''000** | **ரூபா ''000** | **ரூபா ''000** |
| ஆளுக்குரிய வேதனம் | 8,418 | 8,012 | 406 | 18,101 | 6,901 | 11,200 |
| ஏனையவை | 2,678 | 2,275 | 403 | 2,280 | 2,280 | - |
| உப மொத்தம் | 11,096 | 10,287 | 809 | 20,381 | 9,181 | 11,200 |
| மூலதனச் செலவினம் | 400 | 31,050 | (30,650) | 675 | 675 | - |
| நிகர மொத்தம் | 11,496 | 41,337 | (29,841) | 21,056 | 9,856 | 11,200 |

## 2.3 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| ஊழியர் தரம் | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 01 | - |
| இரண்டாந் தரம் | 12 | 07 |
| ஆரம்ப தரம் | 26 | 17 |
| பிற (சமயாசமய, தற்காலிகம்) | - | 07 |
| | 39 | 31 |

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.4.1 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்படும் வளங்கள்

பெறுமதி கணிப்பிடப்படாத டிறெக்டர் ஒன்றும் டிறெய்லர் ஒன்றும் 4 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்தன.

### 2.4.2 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2009 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டைக் கடந்தும் அறவிடப்படாது நிலுவையாக இருந்த ஊழியர் கடன் முற்பண மீதி ரூபா 19,420 ஆகும்.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் போது பெறுநரின் பெயரில் காசோலை வரையப்படாது ரூபா 412,200 க்கான காசுக் காசோலை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2003 ஜூலை 07 அன்று வாரச் சந்தை அபிவிருத்திக்கென பெறப்பட்ட ரூபா 1,150,000 மற்றும் 2007 நவம்பர் 16 அன்று மோட்டார் சைக்கிள் கொள்வனவிற்கெனப் பெறப்பட்ட ரூபா 800,000 ஆகிய கடன்களை உடன்படிக்கைப் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2009 பெப்ரவரி, ஏப்ரல், ஜூன், ஆகஸ்ட், செப்தெம்பர், நவம்பர் மாதங்களில் சம்பளக் கழிவு தொடர்பாக வரையப்பட்ட ரூபா 188,604 பெறுமதியான காசோலைகள் 2009 டிசெம்பர் 31 வரை குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்படாமலிருந்தன.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றத.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு